بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 36

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

25 ஸுல்ஹஜ் 1439 ஹிஜ்ரி கமரி 06 தபூக் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
06 செப்டம்பர் 2018


## அல்லாஹ்வின் கட்டளை

وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ وَتَثْبِيْتًا مِّنْ اَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍۭ بِرَبْوَةٍ اَصَابَهَا وَابِلٌ فَاٰتَتْ اُكُلَهَا ضِعْفَيْنِ

தங்களுடைய செல்வங்களை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவும், தங்களைத் தாங்களே உறுதிபடுத்திக் கொள்ளவும் செலவு செய்பவர்களின் உதாரணம் உயரமான இடத்திலுள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது பெருமழை பொழிகின்ற போது, அது தனது கனியை இரு மடங்காகத் தருகின்றது. (2:266)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

# ஏதாவதொரு படைப்பினம் எங்கிருந்தாலும் அவை உடலாகவோ ஆன்மாவாகவோ இருந்தாலும் அவை எல்லாவற்றையும் படைப்பவன், பரிபாலிப்பவன் இறைவனேயாவான். அவன் எல்லா நேரமும் அவர்களை பரிபாலித்துக் கொண்டும், அவர்களின் நிலைக்கு ஏற்றவாறு அவர்களுக்குச் சகல ஏற்பாடுகளையும் நிறைவேற்றிக் கொண்டும் இருக்கின்றான்

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

ஒரு மனிதன் எவ்வளவு பெரும் செல்வம் படைத்தவனாய் இருந்தபோதிலும் அவன் தனது விருப்பத்திற்கு மாறாக மரணம் எனும் பானத்தை அருந்துகிறான். இறைவனின் கட்டளை வந்ததும் எவராலும் தனது மரணத்தை ஒரு வினாடிக்குக் கூட தடை செய்ய முடிவதில்லை. ஆகவே இவ்வுண்மையான அரசனின் கட்டளைகளின் மூலம் அவனது பெரும் தோற்றமானது பூமியில் எவ்வாறு இருந்து வருகிறதென்பதை கவனியுங்கள். மேலும் சிகிச்சைக்குத் தகுதியற்ற மிக மோசமான வியாதி சூழ்ந்து கொள்ளும் போது எந்தவொரு மருத்துவராலும் அதனைக் குணப்படுத்த முடிவதில்லை.

ஆகவே அவனது கட்டளையை நிராகரிக்க முடியாத அளவிற்கு இறைவனது ஆட்சியின் பெரும் தோற்றமானது பூமியில் எவ்வாறு இருந்து வருகிறது என்பதைக் கவனியுங்கள். இவ்வாறிருக்க, பூமியில் இறைவனது ஆட்சி இல்லை என்று பின்னர் ஏதாவதொரு காலத்தில் உருவாகுமென்றும் எவ்வாறு கூற முடியும்?

கவனியுங்கள்! இதே காலத்தில் இறைவனது வானத்தின் கட்டளையானது தனது வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு ஓர் அடையாளமாக இருப்பதற்காக பிளேக் நோயால் இந்த பூமியை ஆட்டி வைத்தது. ஆகவே அவனது விருப்பம் இல்லாமல் அதனைத் தடுத்து நிறுத்த எவரால் முடியும்? எனவே இப்போது பூமியில் இறைவனது ஆட்சி இல்லை என்றும் எவரால் கூற முடியும்?

ஆயினும் ஒரு தீயவன் கைதிகளைப் போல் அவனது பூமியில் வாழ்ந்து கொண்டு, தான் ஒருபோதும் மரணம் அடையக்கூடாது என விரும்புகிறான். ஆனால் இறைவனின் உண்மையான ஆட்சியானது அவனை அழித்து விடுகிறது. மேலும் இறுதியில் மலக்குல் மவ்த் என்னும் உயிரைக் கைப்பற்றும் வானவரின் பிடிக்கு அவன் ஆளாகி விடுகிறான். இவ்வாறிருக்க இப்போது வரை பூமியில் இறைவனது ஆட்சி இல்லை என்று எவ்வாறு கூற முடியும்?

கவனியுங்கள்! ஒவ்வொரு நாளும் பூமியில் இறைவனின் கட்டளையின்படி ஒரே சமயத்தில் கோடிக்கணக்கான மக்கள் மரணமாகிக் கொண்டிருகிறார்கள். மேலும் கோடிக்கணக்கில் அவனது நாட்டப்படி பிறந்து கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர அவனது விருப்பப்படி கோடிக்கணக்கான ஏழைகள் செல்வந்தர்களாகவும், செல்வந்தர்கள் ஏழைகளாகவும் மாறுகின்றனர்.

இவ்வாறிருக்க இதுவரை பூமியில் இறைவனது ஆட்சி உண்டாகவில்லை என்று எவ்வாறு கூற முடியும்? வானங்களில் மலக்குகள் என்னும் வானவர்கள் மட்டும் இருந்து வருகிறார்கள். ஆனால் பூமியில் மனிதர்களும் மலக்குகளும் இருந்து வருகின்றனர். இவர்கள் இறைவனின் பணியாளர்களாகவும் அவனது ஆட்சியின் ஊழியர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் மக்களின் பல்வேறு பணிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் ஒவ்வொரு சமயமும் இறைவனுக்குக் கட்டுப்பட்டுக் கொண்டும் தங்களின் அறிக்கைகளை இறைவனுக்கு அனுப்பிக் கொண்டும் இருக்கின்றனர். ஆகவே பூமியில் இறைவனது ஆட்சி இல்லை என்று எவ்வாறு கூற முடியும்? இன்னும் சொல்வதென்றால், எல்லாவற்றையும் விட மேலாக தனது பூமியின் ஆட்சியைக் கொண்டே இறைவன் நன்கு அறியப்பட்டிருக்கிறான்.

ஏனெனில் வானத்தின் இரகசியம் மறைவானதாகவும் காண முடியாததாகவும் இருப்பதாக ஒவ்வொரு மனிதனும் நினைக்கிறான். பைபிளின் புதிய ஏற்பாடு இறைவனது ஆட்சியின் முழு அடிப்படையும் வானம் என்கிறது. ஆனால் இக்காலத்து கிறிஸ்தவர்களும் அவர்களின் தத்துவ வாதிகளும் வானங்கள் இருப்பதையே ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் உருண்டை வடிவமான பூமி நமது கால்களுக்கடியில் இருந்து வருகிறது. அதில் 'கழா வ கதர்' என்னும் இறைவன் வகுத்த விதியின் ஆயிரக்கணக்கான விஷயங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது மாறுவதும், ஆகுவதும், அழிவதும் ஆகிய இவையெல்லாம் ஏதோவதொரு குறிப்பிட்ட எஜமானனின் கட்டளைகளின்படி நடந்து கொண்டிருப்பதை நம்மால் விளங்க முடிகிறது. இவ்வாறிருக்க இதுவரை பூமியில் இறைவனது ஆட்சி ஏற்படவில்லை என்று எவ்வாறு கூற முடியும்? மாறாக, கிறிஸ்தவர்களிடையே வானங்களை மிக உறுதியாக

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வின் அருளால் இன்று நாம் இன்னோர் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நற்பேற்றைப் பெறுகின்றோம். அனைவரும் ஆண்டு மாநாட்டின் இந்த மூன்று நாட்களின் ஆன்மீகச் சூழலிலிருந்து பயனடைய முயற்சி செய்ய வேண்டும். ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளை அமைதியாகவும், கவனமாகவும் கேட்க முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் ஆண்டு மாநாட்டில் பங்கு பெற்றதற்கான பயனைப் பெற முடியும். அப்போதுதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் துவக்கப்பட்ட இந்த ஆண்டு மாநாட்டின் நோக்கத்தை முழுமை செய்ய முடியும்**

---

**விருந்தினர்கள் எப்படி நடந்து கொண்டாலும் சரி, பணி செய்யக் கூடியவர்கள் சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு அவர்களது உணர்வுகளை கருத்தில் கொள்ள வேண்டும். இதை பணியாளர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்**

---

**அஹ்மதிகள் விருந்தினராகவோ அல்லது விருந்து உபசரிப்பவராகவோ இருந்தாலும் அவர்கள் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பது முற்றிலும் சரியான விஷயமாகும். ஆனால் எவர்கள் தம்மைத்தாமே விருந்தினர்களை உபசரிப்பதற்காக அர்ப்பணித்துள்ளார்களோ அவர்கள் மேலும் அதிகமான நல்லொழுக்கங்களை வெளிப்படுத்த வேண்டும்**

---

**மற்றவர்கள் எவ்வாறு நடந்து கொண்டாலும் பணி செய்பவர்களது முகத்தில் புன்சிரிப்பு தென்பட வேண்டும். பணி செய்பவர்கள் இதனைக் கடைபிடிக்க வேண்டும்.**

---

**ஆண்டு மாநட்டின் பணிகளைச் செய்வதற்கென்று முறையாக ஓர் அமைப்பு இருக்கின்றது. இதற்குப் பல்வேறு துறைகள் இருக்கின்றன. பணிகளை எளிதாக்குவதற்காக அவை உருவாக்கப்பட்டுள்ளன. ஏதாவதொரு துறையில் குறைகள் தென்பட்டால் அல்லது அவர் தனக்குரிய உரிமை என்று எதிர்பார்க்கின்ற வகையில் அவருக்கு விருந்து உபசரிப்பு செய்யப்படவில்லை என்றால் பணியாளர்களிடம் சண்டையிடுவதற்குப் பகரமாக அத்துறை சம்பந்தப்பட்ட மேலதிகாரிக்கு எழுதவும்**

---

**இஸ்லாத்தின் சிறந்த பண்புகளில் ஒன்று, ஒரு நம்பிக்கையாளர் வீணான விஷயங்களைப் பேசுவதிலிருந்து விலகி இருக்க வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் இதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஆண்டு மாநாட்டைக் கலப்பற்ற அல்லாஹ்விற்கே உரிய மாநாடாக ஆக்கி இருக்கும் போது நாம் எல்லா விதமான வீணான விஷயங்களிலிருந்தும், நேரத்தை வீணாக கழிப்பதிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும்**

---

**தர்பிய்யத்தைப் பொருத்தவரையிலும், மார்க்கத்துடன் இணைந்திருப்பது தொடர்பாகவும் மிக முக்கியமான விஷயம் இறை வணக்கமாகும். இதற்கான நம் மீது ஐவேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டுள்ளது**

---

**பாதுகாப்பு விஷயங்கள் தொடர்பாகவும் விழிப்புடன் இருங்கள். மாநாட்டுத் திடலுக்கு உள்ளேயும், வெளியேயும் உங்களது சுற்றுச் சூழலின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 03 ஆகஸ்ட் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **03 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அல்லாஹ்வின் அருளால் இன்று நாம் இன்னோர் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நற்பேற்றைப் பெறுகின்றோம். அல்ஹம்துலில்லாஹ். சிலர் முதல் முறையாக இந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். பெரும்பாலானவர்களுக்குப் பயணம் செய்வதற்கான வசதியும் விசாவிற்கான ஏற்பாடும் இருக்கின்றது. அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

U.K வில் இருக்கக்கூடிய சிலரும் இப்போது தான் முதல் முறையாக ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். அவர்கள் இங்கு வந்து சில காலங்களே ஆகியுள்ளது. இங்கு வந்து குடியேறியுள்ளனர். மேலும் சில குழந்தைகள் தமது புரியும் திறனைப் பெற்ற பிறகு தற்போதுதான் ஆண்டு மாநாட்டின் சூழலிலிருந்து பயனடையக்கூடியவர்களாக இருப்பர்.

எனவே இவர்கள் அனைவருக்கும் ஆண்டு மாநாட்டின் ஆன்மீகச் சூழலிலிருந்து பயனடைய முயற்சி செய்ய வேண்டும். ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளை அமைதியாகவும், கவனமாகவும் கேட்க முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் ஆண்டு மாநாட்டில் பங்கு பெற்றதற்கான பயனைப் பெற முடியும். அப்போதுதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் துவக்கப்பட்ட இந்த ஆண்டு மாநாட்டின் நோக்கத்தை முழுமை செய்ய முடியும்.

நாம் அனைவரும் அறிந்திருப்பது போன்று ஆண்டு மாநாட்டின் நாட்களில் செய்யப்பட்டுள்ள 90 சதவிகித ஏற்பாடுகளை ஜமாஅத் உறுப்பினர்கள் தன்னார்வத் தொண்டாகச் செய்கின்றனர். எனவே சில பணிகளில் குறைகளும், பலவீனங்களும் ஏற்பட்டு விடுகின்றன. இந்தக் குறைகளையும், பலவீனங்களையும் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்ற நாம் அனைவரும் சரி செய்ய வேண்டும். அவற்றை அகற்ற வேண்டும்.

எங்குப் பணியாளர்கள் தத்தமது பணிகளை ஆய்வு செய்து அதனைச் சரி செய்வதற்கு முயற்சி செய்வார்களோ அங்கு விருந்தினர்களும் இந்தக் குறைகளையும், பலவீனங்களையும் சரி செய்ய வேண்டும். எங்குப் பணியாளர்களுக்கு உதவிக்கான தேவையுள்ளதோ அங்கு அவர்கள் தாமே முன் வந்து அவர்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் நம்மிடம் ஒற்றுமை ஏற்படும்.

நாம் மற்றவர்களது சுமையை சுமக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு உதவி தேவைப்பட்டால் உதவி செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். எனவே இந்த அடிப்படையான விஷயத்தை விருந்தினர்களும், விருந்து உபசரிப்புச் செய்பவர்களும் நினைவில் வைக்க வேண்டும்.

பொதுவாக பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் தொடர்பாக ஆண்டு மாநாட்டின் முந்தைய குத்பாவில் நான் எடுத்துரைப்பேன். மேலும் விருந்தினர்களுக்கு அவர்களது கடமைகள் தொடர்பாக மாநாட்டு நாளின் குத்பாவில் சில விஷயங்களை எடுத்துரைப்பேன்.

நமது ஆண்டு மாநாட்டு அமைப்பின் தனிச்சிறப்பு என்னவென்றால், நாம் மற்றவர்களது உரிமைகளையும், கடமைகளையும் சிறந்த முறையில் நிறைவேற்றக் கூடியவர்களாகவும், அதனைப் புரியக் கூடியவர்களாகவும் இருக்கும் போது தான் நாம் ஒவ்வொருவரும் அன்புடனும், நேசத்துடனும் இருக்க முடியும். அப்போது தான் நம்மிடத்தில் ஒற்றுமை உருவாகும்.

எவ்வாறிருப்பினும், இன்று நான் இரு தரப்பினருக்குமே சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன். மேலும் இதன் பக்கம் கவனமூட்டுவேன். பணியாளர்களுக்கு நான் கடந்த குத்பாவில் எதுவும் கூறவில்லை. எனினும், ஆண்டு மாநாடு தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆய்வின் போது அவர்களது செயல்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும்? மேலும் எவ்வாறு அவர்கள் பணி செய்ய வேண்டும்? என்பது தொடர்பாகக் கவனமூட்டினேன்.

அல்லாஹ்வின் அருளால் ஒரு நீண்ட காலமாக பெரும்பாலான பணியாளர்கள் டியூட்டி கொடுத்து வருகின்றனர். எனவே பணிகளைப் புரிவது மற்றும் அதனைச் செய்வது தொடர்பாக இங்குள்ள பணியாளர்கள் சிறந்த தர்பிய்யத்தைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு வருடமும் புதிதாக கலந்து கொள்ளக்கூடிய பணியாளர்கள், குழந்தைகள், இளைஞர்கள் முன்பிலிருந்தே பணி செய்து வருகின்ற பணியாளர்களிடமிருந்தும், மேலதிகாரிகளிடமிருந்தும் அவர்கள் பயனடைந்தவாறு பணி செய்கின்றனர்.

ஆனால் சில விஷயங்களை அதிகமாக கவனமூட்டவேண்டிய தேவை உள்ளது. அது தொடர்பாக நினைவூட்ட வேண்டியதும் வருகின்றது. எனவே நான் கூறியது போன்று இப்போது நான் விருந்தினர்களுக்கும். விருந்து உபசரிப்பு செய்பவர்களுக்கும் சில விஷயங்களின் பக்கம் கவனமூட்டுவேன்.

முதலாவதாக பணியாளர்களிடம் நான் கூறுகின்றேன். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட, இன்னும் சொல்வதென்றால் அல்லாஹ்வின் கட்டளைகேற்பத் துவக்கப்பட்ட இந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்குத் தொண்டு செய்வதற்காகத் தம்மைத் தாமே அர்ப்பணித்துள்ளனர். அவர்கள் எந்தவோர் உலக கேளிக்கைகளில் கலந்து கொள்வதற்காக வரவில்லை.

மாறாக, அவர்கள் தமது ஆன்மீக நிலைமையையும், அறிவு மற்றும் நல்லொழுக்கங்களையும் மேம்படச் செய்வதற்காக வருகை தந்துள்ளனர். மேலும் நான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களது எண்ணங்கள் இதுவாகவே இருக்கும் என்று நம்புகின்றேன். அவ்வாறு தான் இருக்கவும் வேண்டும். இல்லையென்றால் அவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வது வீணானதாகும்.

எவ்வாறிருப்பினும், விருந்தினர்கள் எப்படி நடந்து கொண்டாலும் சரி, பணி செய்யக் கூடியவர்கள் சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு அவர்களது உணர்வுகளை கருத்தில் கொள்ள வேண்டும். இதை பணியாளர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். கலந்து கொள்பவர்கள் தவறாக நடந்து கொண்டாலும் பணியாளர்களது பணி என்னவென்றால் அவர்கள் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவர்கள் செய்வது போன்ற அதே நடைமுறையை நீங்கள் மேற்கொள்ளக்கூடாது. ஒவ்வொரு பணியாளரும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காகத் தம்மைத் தாமே அர்ப்பணித்து விட்ட பிறகு சில விருந்தினர்களின் தவறான நடைமுறையைப் பொறுத்துக் கொள்ள வேண்டியது வந்தாலும் அதனைப் பொறுத்துக் கொள்ளுங்கள்.

அப்போதுதான் அல்லாஹ்வின் திருப்தியை நீங்கள் பெற முடியும். நாம் எந்த நபியை ஏற்றுக் கொண்டுள்ளோமோ அந்த நபியின் முன்மாதிரி விருந்தினர்கள் தொடர்பாக எவ்வாறு இருந்தது? எப்போதாவது வரக்கூடிய விருந்தினர்கள் அல்ல. மேலும் வருடத்தில் ஓரிருமுறையோ, ஆண்டு மாநாட்டிலோ வரக்கூடியவர்கள் அல்ல. மாறாக, அந்த மக்கள் அவர்களோடு நகரத்தில் வசிக்கக் கூடியவர்களாக இருந்தனர். மேலும் தினமும் சந்திக்கக் கூடியவர்களாக இருந்தனர்.

அவர்களை அவர்களது ஏழ்மையின் காரணமாக உணவு உண்பதற்காக அழைத்தால் அல்லது சாதாரணமாக உணவு உண்பதற்கு அவர்களை அழைத்தால் அவர்கள் நீண்ட நேரம் பேச அமர்ந்து விடுகின்றனர். அது அன்னாரது ஓய்விற்கும் பணிக்கும் இடையூறாக இருந்தாலும் அன்னார் ஒருபோதும், குறித்த நேரத்திற்கு முன்பு வாருங்கள். நான் பிஸியாக இருக்கிறேன் என்று கூறியதில்லை. மேலும் உணவு உண்ட பிறகு விரைவாகச் சென்று விடுங்கள். நீங்கள் அமர்ந்திருப்பதனால் நான் எனது சில பணிகளைச் செய்ய முடியாமல் இருக்கின்றேன் என்று அன்னார் கூறியதில்லை.

மக்களது இந்த நிலையையும், விருந்தினர்களிடம் அன்னார் காட்டும் பொறுமையையும் கண்டு அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம், فَيَسْتَحْيِ مِنْكُمْ அதாவது அவர் உங்களது உணர்வுகளைக் கருத்தில் கொண்டு உங்களைத் தடுப்பதிலிருந்து வெட்கப்படுகின்றார் (33:54) என்று கூறுகின்றான். ஆனால் அல்லாஹ்விற்கு இதைக் கூற எவ்விதத் தடையுமில்லை. எனவே நீண்ட நேரம் நபியின் வீட்டில் அமர்ந்து அவருக்குக் கஷ்டத்தை கொடுக்காதீர்கள்.

ஆக ஒருபுறம் அல்லாஹ் நபி (ஸல்) அவர்கள் உயர் தரமான சிறந்த விருந்து உபசரிப்பைப் பற்றியும், அவர்களது சிறந்த ஒழுக்கங்களைப் பற்றியும் கூறி விட்டான். மறுபுறம் விருந்தினர்களிடம், உங்களது உரிமைகள் என்று நினைத்து எல்லை

மீறாதீர்கள். விருந்தினர்களுக்கான வட்டத்திற்குள் இருங்கள். அந்த வட்டத்திற்குள் இருக்க வேண்டியது அவசியமாகும் என்று கூறுகின்றான். எனவே விருந்தினர்கள் ஆகுமானதல்லாத உரிமைகளைப் பெறக்கூடாது.

பிறகு அந்நியர்களுக்கு விருந்து உபசரிப்புச் செய்வதில் அன்னாரது தரம் எவ்வாறு இருந்தது என்றால் அதைப் பார்த்து வியப்பு ஏற்படுகின்றது. இதற்கான உதாரணத்தை நாம் பார்க்கின்றோம்.

முஸ்லிமல்லாத ஒருவர் விருந்தினராக வருகின்றார். அன்னார் அவருக்கு விருந்து உபசரிப்பு செய்கின்றார்கள். அவர் காலையில் எழுந்து செல்லும் போது படுக்கையை அசுத்தமாக்கி விட்டுச் சென்று விடுகின்றார். அன்னாரே அதைச் சுத்தப்படுத்துகின்றார்கள். சஹாபாக்கள் அன்னாரிடம், எங்களுக்கும் தொண்டு செய்வதற்கான வாய்ப்பைத் தாருங்கள். நாங்கள் இருக்கின்றோம். நீங்கள் ஏன் கஷ்டப்படுகின்றீர்கள் என்று கேட்கின்றனர். ஆனால் அன்னார், அவர் எனது விருந்தினர். எனவே நானே அதை சுத்தப்படுத்துவேன் என்று கூறுகிறார்கள்.

(மஸ்னவி மவ்லவி மஃனவி, தொகுதி 5 பக்கம் 20–24, காஸி சஜ்ஜாது ஹுஸைனுல் ஃபைஸல் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது, 2006 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

எனவே இத்தகு உயர் தரமான நல்லொழுக்கத்திற்கு எதிரில் எவராலும் போட்டி போட முடியாது.

நமது மாநாடுகளில் நம்மவர்களும் வருகின்றனர். அந்நியர்களும் வருகின்றனர். வரக்கூடிய அனைவரும் நல்லொழுக்கத்தில் சிறந்து விளங்குபவர்கள் ஆவர். அவர்கள் மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதற்கோ அல்லது இஸ்லாம் அஹ்மதிய்யத்தை அறிந்து கொள்வதற்கோ வருகின்றனர். மனித பலவீனங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கின்றன.

தவறுகள் நிகழ்ந்து விட்டாலும், யாராவது வரம்பு மீறியிருந்தாலும் அவர்கள் தீய நடத்தையுடையவர்கள் என்றோ அவர்களது எண்ணம் நல்லது அல்ல என்றோ நம்மால் கூற முடியாது. இது மனித பலவீனங்கள் ஆகும். இதன் விளைவாகச் சில நேரங்களில் தவறுகள் நிகழ்ந்து விடுகின்றது. அவ்வாறு நடந்து விட்டாலும் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அஹ்மதிகள் விருந்தினராகவோ அல்லது விருந்து உபசரிப்பவராகவோ இருந்தாலும் அவர்கள் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பது முற்றிலும் சரியான விஷயமாகும். ஆனால் எவர்கள் தம்மைத் தாமே விருந்தினர்களை உபசரிப்பதற்காக அர்ப்பணித்துள்ளார்களோ அவர்கள் மேலும் அதிகமான நல்லொழுக்கங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

பணியாளர்கள் தரப்பிலிருந்து பொறுமையும், நல்லொழுக்கங்களும் வெளிப்பட்டால் மற்றவர் தாமே வெட்கப்படுவார். எனவே தொண்டாற்றக்கூடிய ஒவ்வொருவரும் தத்தமது துறையில் சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

மேலும் இதை இன்றைய நாட்களில் ஓர் அறைகூவலாக எடுத்துக் கொண்டு சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் இதன் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகின்றான். قُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا (2:84). அதாவது மக்களிடத்தில் மென்மையாகப் பேசுவீராக. நல்ல முறையில் பேசுவீராக. சண்டைகளை முடிவுக்கு கொண்டு வரவும், சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தவும் இது மிகவும் அடிப்படையான விஷயமாகும். இந்த வழிமுறை சில குறிப்பான சூழ்நிலைக்கு மட்டுமல்ல. மாறாக, எல்லா நேரத்திற்கும் உரியதாகும். மனிதனுக்கு இதற்கான பழக்கம் ஏற்பட்டு விட்டால் பிறகு ஒருபோதும் வரம்பு மீறுதலும், பகைமையும் உருவாகாது.

எனவே விருந்தினர்களும், விருந்து உபசரிப்புச் செய்பவர்களும் இங்கும், எல்லா நேரமும் அல்லாஹ்வின் இந்தக் கட்டளையை எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். குறிப்பாக இன்றைய நாட்களில் இதனைக் கண்டிப்பாகச் செயல்படுத்துங்கள். இந்தச் சூழலை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மகிழ்ச்சிகரமானதாக ஆக்க வேண்டும். இதன் மூலமாக நாம் எந்த நோக்கத்திற்காக இங்கு ஒன்று கூடியுள்ளோமோ அது முழுமை பெற வேண்டும்.

அந்த நோக்கமானது, நமது நல்லலொழுக்க, ஆன்மீக நிலைமைகளைச் சிறந்ததாக ஆக்குவதாகும். இந்த நல்லொழுக்கங்களே இங்கு வருகை தருகின்ற அன்னியர்களிடமும் இஸ்லாத்தின் சிறந்த ஒழுக்கங்களை மேற்கொள்வதற்கான காரணியாக அமையும். இது ஓர் அமைதியான பிரச்சாரமாகும். விருந்தினர்களும், விருந்து உபசரிப்புச் செய்பவர்களும் அமைதியாக பிரச்சாரம் செய்யக் கூடியவர்களாக இருப்பர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எடையைப் பொருத்தவரை சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதை விட வேறு எந்த விஷயமும் பெரிது கிடையாது. மேலும் சிறந்த நல்லொழுக்கத்தைப் பெற்றிருப்பவர் தொழுகை மற்றும் நோன்பை முறையாக பேணக் கூடியவராகவும் இருப்பார்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் அதப், பாபு ஃபீ ஹுஸ்னுல் கல்க், ஹதீஸ் எண் 4798, 4799)

அதாவது நன்மை செய்வதற்கான நற்பாக்கியம் கிடைக்கின்றது. குறிப்பாக அல்லாஹ்வின் திருப்தியை நாடியவாறு நன்மை செய்ய பாக்கியம் கிடைக்கும் போதுதான் இறை வணக்கத்தின் பக்கமும் கவனம் ஏற்படுகின்றது. அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதற்கான நற்பாக்கியம் கிடைக்கின்றது. அதாவது நான் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துகின்றேன். எனவே இந்த நன்றி செலுத்துதல்தான் இறை வணக்கத்தின் பக்கமும் கவனமூட்டுகிறது.

எனவே ஒரு நன்மை பெரிய பெரிய நன்மைகளைச் செய்வதற்கு நற்பாக்கியத்தை வழங்கிக் கொண்டே செல்கின்றது. ஒரு நன்மை இன்னொரு நன்மையைச் செய்வதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. எனவே மற்றவர்கள் எவ்வாறு நடந்து கொண்டாலும் பணி செய்பவர்களது முகத்தில் எப்போதும் புன்சிரிப்பு தென்பட வேண்டும். அவர்களது இந்த வெளிப்படையான நிலைமையின் தாக்கம் உள்ளத்திலும் ஏற்படும்.

மேலும் உள்ளத்திலும் எவ்வித கடுமையும் ஏற்படாது. உள்ளத்தில் எவ்வித கடுமையும் ஏற்படாத போது சில நேரங்களில் கோபத்தின் காரணமாக வழங்கப்படுகின்ற தவறான தீர்ப்பும் வழங்கப்படாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இந்த உயர் தரமான பண்பை எடுத்துக் கூறியவாறு ஒரு சஹாபி கூறுகின்றார்கள். நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விடச் சிரித்த முகத்தை உடைய வேறு எவரையும் கண்டதில்லை.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாபு கவ்ல் இப்னு.... அஹது ஹதீஸ் எண் 3641)

பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இந்த போதனையையும் வழங்கினார்கள். அதாவது மென்மையைக் கைகொள்ளுங்கள். எவர் மென்மையைக்

கைக்கொள்வதிலிருந்து விலகியுள்ளரோ அவர் நன்மையிலிருந்தும் விலக்கப்பட்டவராக இருக்கின்றார்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா, பாபு ஃபஸ்லுர் ரிஃப்க் ஹதீஸ் எண் 6598)

இந்த விஷயத்தை விருந்தனர்களும், விருந்து உபசரிப்பு செய்பவர்களும் புரிந்து கொண்டால் இந்த ஆன்மீகச் சூழலிலிருந்து நன்மைகளையும், அருட்களையும் பெறக் கூடியவர்களாக ஆகி விடுவர். ஒவ்வொரு பணியாளரும் உளப்பூர்வமாகத் தொண்டு செய்கின்றார். இருந்த போதிலும் எவரது உள்ளத்திலாவது, அவரை அதிகமாகக் கவனிக்கின்றனர். என்னைக் குறைவாகவே கவனிக்கின்றனர் என்ற எண்ணம் இருக்குமென்றால் அந்த எண்ணத்தையும் கூட அகற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அத்தோடு நான் மாநாட்டில் கலந்து கொள்பவர்களிடமும் கூறுவேன். அதாவது நான் கூறியது போன்று ஆண்டு மாநாட்டின் இந்த மிகப் பெரிய ஏற்பாடுகள் தன்னார்வத் தொண்டர்கள் மூலமாகவே நடைபெறுகிறது. இவர்கள் நமது வேலையாட்கள் கிடையாது. இவர்களில் சிலர் மிகச் சிறந்த பொறுப்பை வகிக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற ஓர் உணர்வுடன் அவர்கள் தொண்டாற்றுகின்றார்கள். அவ்வாறே பள்ளிக் கூடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் படிக்கின்ற இளைஞர்கள், மாணவ, மாணவிகள், குழந்தைகள் ஆகிய அனைவரும் ஓர் உணர்வுடன் தொண்டாற்றுகின்றனர்.

எனவே எங்கேயாவது ஏதேனும் சிறிய குறைகள், பலவீனங்கள் தென்பட்டாலும் கூட அவற்றைக் கண்டும் காணாமல் இருங்கள். மேலும் நாம் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் மற்றும் அவனது மார்க்க விஷயங்களைக் கேட்பதற்காக மட்டுமே இங்கு ஒன்று கூடியுள்ளோம் என்ற ஒரே ஒரு நோக்கத்தை மட்டும் முன் வையுங்கள்.

இந்த நோக்கம் முன்னே இருக்குமென்றால் எவ்வித குற்றச்சாட்டும் எழாது. ஆண்டு மாநாட்டின் பணிகளைச் செய்வதற்கென்று முறையாக ஓர் அமைப்பு இருக்கின்றது. இதற்கு பல்வேறு துறைகள் இருக்கின்றன. அவை பணிகளை எளிதாக்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளன.

ஏதாவதொரு துறையில் குறைகள் தென்பட்டால் அல்லது அவர் தனக்குரிய உரிமை என்று எதிர்பார்க்கின்ற வகையில் அவருக்கு விருந்து உபசரிப்பு செய்யப்படவில்லை என்றால் பணியாளர்களிடம் சண்டையிடுவதற்குப் பகரமாக அத்துறை சம்பந்தப்பட்ட மேலதிகாரிக்கு எழுதவும்.

இந்த ஆண்டு குறைகளை சரி செய்ய முடியவில்லை என்றாலும் அடுத்த ஆண்டில் அது கருத்தில் கொள்ளப்படும். மேலும் நமது ஜமாஅத்தின் தனிச்சிறப்பு இதுவேயாகும். மேலும் அவ்வாறு இருக்கவும் வேண்டும். அதாவது எந்த குறைகள் தொடர்பாகச் சுட்டிக் காட்டப்படுகின்றனவோ அதை அகற்றுவதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. அல்லது முயற்சி செய்யப்பட வேண்டும்.

விருந்தினர் உபசரிப்பில் மிக முக்கிய துறை உணவு சமைப்பதாகும். ஆண்டு மாநாட்டின் போது லங்கரில் சில பிரத்தியேகமான உணவுகள் சமைக்கப்படுகின்றன. உலகில் எங்கெல்லாம் ஆண்டு மாநாடுகள் நடைபெறுகின்றனவோ அங்கும் அவ்வாறே சமைக்கப்படுகின்றது.

அல்லது எங்கு பாகிஸ்தான் மற்றும் இந்தியாவைச் சார்ந்தவர்கள் இருக்கின்றனரோ அங்கு அது சமைக்கப்படுகிறது. சில குறிப்பிட்ட உணவுகள் வெளிநாட்டைச் சார்ந்தவர்களுக்காகச் சமைக்கப்படுகின்றன. வெளிநாட்டைச் சார்ந்தவர்கள் என்று நான் கூறுவது பாகிஸ்தான் மற்றும் இந்தியாவைச் சாராதவர்கள் ஆவர்.

எனவே சில குறிப்பான உணவான ரொட்டி, பருப்பு, உருளைக்கிழங்கு மற்றும் கறி லங்கரில் சமைக்கப்படுகிறது. நாம் நமது விருப்பத்திற்கேற்ப அவர்களுக்கு உணவு சமைக்க வேண்டும் என்றல்லாமல் உணவு சமைப்பவர்கள் இதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது உணவை நன்றாகச் சமைக்க வேண்டும். குறிப்பாகக் கறியை நன்றாகச் சமைக்க வேண்டும்.

நேற்று கறி நன்றாக வேக வைக்கப்படவில்லை என்று எனக்கு தெரிய வந்தது. நேற்று குறைவான விருந்தினர்கள் இருந்ததனால் குற்றச்சாட்டு வந்திருக்காது. ஆனால் இன்றும் இதே நிலை தான் என்றால் ஏற்பாட்டாளர்கள் இதன் பக்கம் குறிப்பான கவனம் செலுத்த வேண்டும். கறியின் தரம் சரியாக இல்லாமலிருந்தால் ஏற்பாட்டாளர்கள் தரம் வாய்ந்த கறி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். விருந்தினர்கள் இது பற்றிச் குற்றஞ்சாட்ட மாட்டார்கள் என்று நான் நம்புகின்றேன்.

அவ்வாறு அவர்கள் குற்றஞ்சாட்டினாலும் அது அவர்களது ஆகுமான குற்றச்சாட்டாகவே இருக்கும். குற்றஞ்சாட்டுவதும் கூட கோபமாக அல்லாமல் ஏற்பாட்டாளர்களிடம் மென்மையுடனும் அன்புடனும் இந்தக் குறை உள்ளது என்று கவனமூட்டுங்கள். இதனால் உணவும் வீணாகின்றது. அதைப் பாதுகாக்க வேண்டும் என்றும் நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

நம்பிக்கையாளர்கள் வீணான விஷயங்களை விட்டு விடுவதும் இஸ்லாத்தின் அழகிய ஒழுக்கங்களில் ஒன்றாகும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

(சுனன் இப்னி மாஜா, கிதாபுல் ஃபித்ன், பாபு கிஃபுல் லிஸான் ஃபில் ஃபித்னா, ஹதீஸ் எண் 3976)

ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் இதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது ஒரு நம்பிக்கையாளர் வீணான விஷயங்களைப் பேசுவதிலிருந்து விலகி இருக்க வேண்டும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஆண்டு மாநாட்டைக் கலப்பற்ற விதத்தில் அல்லாஹ்விற்கே உரிய மாநாடாக ஆக்கி இருக்கும் போது நாம் எல்லா விதமான வீணான விஷயங்களிலிருந்தும், நேரத்தை வீணாக கழிப்பதிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும்.

மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கவனமாக கேட்க வேண்டும். சொற்பொழிவாளர்கள் உங்களுக்கு விருப்பமானவர்களோ இல்லையோ, எப்படிப்பட்ட சொற்பொழிவுகள் வைக்கப்பட்டுள்ளனவென்றால் அவை ஒவ்வொருவருக்கும் பயன் தரக்கூடியதக இருக்கின்றன.

சொற்பொழிவின் ஏதாவதொரு விஷயம் எவரது உள்ளத்திலாவது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. எனவே கவனமாகக் கேளுங்கள். அப்போது தாக்கமும் ஏற்படும். தேவையில்லாமல் வெளியில் எழுந்து செல்ல வேண்டாம். இப்போது இருக்கின்ற கூட்டம் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளின் போதும் அவ்வாறே இருக்க வேண்டும்.

ஏனென்றால் குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் ஆண்டு மாநாட்டின் முக்கியத்துவம் தெரிய வேண்டும். அதன் மூலமாக அவர்களும் தம்மைத் தாமே மார்க்கத்தோடு இணைக்க வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

இன்றைய உலகச் சூழலில் குழந்தைகளிடத்திலும், இளைஞர்களிடத்திலும் மார்க்க உணர்வை ஏற்படுத்துவது, மேலும்

அதனோடு இணைப்பது பெற்றோர்களின் முக்கியமான மற்றும் மிகப் பெரிய பணியாகும். இதன் பக்கம் குறிப்பாகக் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு தாயும், தந்தையும் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் இதற்கான நற்பாக்கியத்தை அனைவருக்கும் வழங்குவானாக.

தர்பிய்யத்தைப் பொருத்தவரையிலும், மார்க்கத்துடன் இணைந்திருப்பது தொடர்பாகவும் மிக முக்கியமான விஷயம் இறை வணக்கமாகும். இதற்காக நம் மீது ஐவேளை தொழுகை கடமையாக்கப்பட்டுள்ளது. மாநாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பெரும்பாலான மக்கள் பயணம் செய்து வெளியிலிருந்து வந்திருப்பதன் காரணமாக இன்றைய நாட்களில் நாம் தொழுகைகளை ஜம்வு செய்கின்றோம்.

இதனையும் கடைபிடிக்க வேண்டும். நீங்களும் கடைபிடியுங்கள். உங்களது குழந்தைகளையும் தொழுகையின் நேரத்தில் நீங்கள் ஹதீக்கத்துல் மஹ்தியில் இருந்தால் கண்டிப்பாக அழைத்து வாருங்கள். ஃபஜ்ர் மற்றும் மக்ரிப், இஷா நேரங்களில் இங்கு நீங்கள் இல்லையென்றால் உங்களது வீடுகளுக்குச் சென்று விட்டால் அங்கு அருகிலுள்ள சென்டர்களுக்கோ, பள்ளிவாசலுக்கோ தொழுகைக்காகச் செல்லுங்கள். பள்ளியிலிருந்து வீடு தொலைவில் இருக்குமென்றால் வீடுகளில் ஜமாஅத்தாக தொழுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறே தொழுகை நேரத்தில் வேலையின்றி இருக்கும் பணியாளர்களும் இங்கு வந்து ஜமாஅத்தாகத் தொழ வேண்டும். எவர்கள் பணியில் இருக்கின்றார்களோ அவர்கள் பணியை முடித்த பிறகு முதலில் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். பணி அமர்த்தும் மேலதிகாரிகளும் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது பணியும் கூட தொழுகை நேரத்தைக் கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும். அது அல்லாமல் பணியின் காரணமாகத் தொழுகையின் நேரம் கழிந்து விடக்கூடாது. நமக்கு தொழுகையின் பக்கம் கவனம் இல்லையென்றால் நமது அனைத்துப் பணிகளும் வீணானவையாகும்.

ஏற்பாடுகள் தொடர்பாகவும் சில விஷயங்களை நான் கூற விரும்புகிறேன். எவர் தமது வண்டிகளில் வருகின்றார்களோ அவர்கள் ஏற்பாட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். வண்டியை எங்கு, எப்படி நிறுத்த வேண்டும் என்று கூறப்படுகிறதோ அவ்வாறே செய்யுங்கள். சில நேரங்களில் இதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. சிலர் பிடிவாதம் செய்கின்றனர்.

தமது விருப்பத்திற்கேற்ப பார்க்கிங் செய்ய வேண்டும் என்பதற்காகப் பணியாளர்களிடம் சண்டையிடுகின்றனர். இதனால் ஏற்பாடுகளில் சீர்குலைவு ஏற்படுகின்றது. சில நேரங்களில் இது மிகப் பெரும் விஷயமாக ஆகி விடுகின்றது. சில கஷ்டங்களும் உருவாகின்றது. சில அபாயகரமான சூழ்நிலையும் ஏற்படுகிறது.

அவ்வாறே ஆண்டு மாநாட்டின் திடலில் மட்டுமின்றி ஃபஸல் பள்ளிவாசலில் தொழ வரக்கூடிய விருந்தினர்களும் தமது வண்டியை அண்டை அயலாலரின் வழியை அடைக்கும் விதத்தில் நிறுத்தாதீர்கள். அவர்களது வீட்டுன் வழியை அடைக்க வேண்டாம். அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படக் கூடாது. நான் ஞாயிற்றுக்கிழமை பணியாளர்களிடம் இவ்வாறு கூறியிருந்தேன்.

அதாவது நமது அயல்வாசிகள் நம்மிடம், நீங்கள் உங்களது காரை எப்படி நிறுத்துகின்றீர்கள் என்றால் அதனால் எங்களது வழிகள் அடைக்கப்பட்டு விடுகின்றன. எங்களது வீட்டிற்குள் காரைக் கொண்டு செல்லவும் முடியவில்லை; வெளியே எடுக்கவும் முடியவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

சிலர் இவ்வாறும் வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது நீங்கள் கிலாஃபத் எங்களுக்கு வழிகாட்டுகின்றது என்று பெரிய பெரிய விஷயங்களைப் பேசுகின்றீர்கள். ஆனால் நாங்கள் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. உங்களது கலீஃபா அண்டை அயலார் குறித்து உங்களுக்கு எடுத்துக் கூறுவதில்லை. அல்லது நீங்கள் அவரது கூற்றைக் கேட்பதில்லை.

அந்நியர் கூறுகின்ற இவ்விஷயம் எப்படிப்பட்டதென்றால் நம்மில் ஒவ்வொருவம் வெட்கப்பட வேண்டிய விஷயமாகும். எனக்கு இவ்விஷயத்தினால் மிகுந்த வெட்கம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் கூறிய கூற்றும் சரியானது தான். நாம் வண்டியை நிறுத்தினால் இந்த இரு விஷயங்கள் தான் இருக்க முடியும். எனவே இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

தன்னைத் தானே துக்கத்தில் ஆழ்த்திக் கொண்டாலும் கூட அண்டை அயலாரின் வழியை அடைக்காதீர்கள். அவர்களைக் கஷ்டப்படுத்தாதீர்கள். இஸ்லாம் எந்த அளவுக்கு அண்டை அயலாருக்கு அவர்களது உரிமையைச் செலுத்துவது தொடர்பாக கவனமூட்டுகின்றதோ அந்த அளவுக்கு வேறெந்த மார்க்கமும் இவ்வாறு வெளிப்படையாக எடுத்துக் கூறியதில்லை. அவ்வாறிருந்தும் நம்மில் எவர் இந்த விஷயத்தின்படி நடக்கவில்லையோ அவர் இதற்காக வெட்கப்பட வேண்டும். அவர் குற்றவாளியாவார்.

குறிப்பாக இலண்டனுக்கு வெளியிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் ஜெர்மனியிலிருந்தும் வரக்கூடியவர்களிடம் நான் கூற விரும்புகின்றேன். எவர்கள் தமது கார்களில் வருகின்றனரோ அவர்கள் இவ்விஷயத்தைக் குறிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும். சிலர் இவ்விஷயத்தைக் கவனத்தில் கொள்வதில்லை. என்னிடம் கூறப்பட்டது.

அதாவது அவர்களிடம் பணி செய்யக் கூடியவர்கள் இது தொடர்பாகக் கூறினால் அவர்கள் அவர்களிடமும் ஏற்றுக் கொள்ள முடியாத செயலைச் செய்கின்றனர். தவறான முறையில் பேசுகின்றனர். ஒன்று, பார்க்கிங்களை தவறாகச் செய்து குற்றம் புரிகின்றனர். அண்டை அயலாலரின் உரிமைகளையும் அவர்கள் பறிக்கின்றனர்.

பிறகு தமது இந்த நடைமுறையின் காரணமாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் உள்ளத்தில் பெரியவர்களுக்குரிய கண்ணியத்தைக் குலைக்கின்றனர். பிறகு குழந்தைகளும் அவ்வாறு தானே பேசும். நீங்கள் ஏன் அவர்களைச் சோதனையில் ஆழ்த்துகின்றனர்.

எனவே இப்படிப்பட்ட நடைமுறையை வெளிப்படுத்தக் கூடியவர்கள் ஆண்டு மாநாட்டிற்குச் செலவு மற்றும் பயணம் செய்து வருவது வீணானதாகும். இதை விட அவர்கள் வராமல் இருப்பதே சிறந்ததாகும். நான் கூறியது போன்று அவர்கள் நஷ்டம் இழைப்பது மட்டுமின்றி அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமாக செயல்பட்டு குழந்தைகளின் தர்பிய்யத்தையும் சீர்குலைக்கின்றனர். எனவே இனிமேல் இது தொடர்பாகக் குறிப்பான கவனம் செலுத்துங்கள்.

ஏற்பாடுகள் தொர்பாகத் தூய்மை என்ற துறையும் உள்ளது. இதன் பக்கமும் குறிப்பான கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. நான் எப்போதும் நினைவூட்டுகின்றேன். தூய்மையை மேற்கொள்வது ஈமானின் ஒரு பங்காகும்.

இதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். விருந்தினர்கள் குளிக்கும் அறையையும், டாய்லட்டை பயன்படுத்திய பின் அதைச் சுத்தப்படுத்தி விட்டு வர வேண்டும். சிலர் புகார் கூறுகின்றனர். எந்த அளவுக்குத் தண்ணீர் தேங்கி இருக்கின்றது என்றால் இன்னொருவர் உள்ளேயே செல்ல முடியாது என்று கூறுகின்றனர். பணியாளர்களின் வேலையாக இருந்தாலும் இந்த

வேலையை பணியார்கள் மீது மட்டும் சுமத்தி விட வேண்டாம். நீங்களும் அவர்களுக்கு இந்த பணியில் உதவி செய்யுங்கள். அவ்வாறே வீதிகளில் குவளைகள் கிடப்பதைக் கண்டால் அதை எடுத்து குப்பைத் தொட்டியில் போடுங்கள்.

இன்றைய நாட்களில் மழை பொய்யாததினால் புற்கள் மிகவும் காய்ந்து விட்டன. அதில் தீ கூட பிடிக்கும் அபாயம் உள்ளது. புற்களை வெட்டி வேறு ஏற்பாடுகளைச் செய்து அதைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் ஏதாவது விபத்து ஏற்படலாம்.

எனவே கவனத்துடன் இருக்க வேண்டும். எனவே பணியாளர்களும், விருந்தினர்களும் நெருப்பு பற்றக்கூடிய எந்தவொரு பொருளையும் தரையில் போடக்கூடாது என்ற இந்த விஷயத்தின் பக்கம் குறிப்பான கவனம் செலுத்துங்கள். இது உண்மையாகும். எவருக்காவது புகை பிடிக்கும் பழக்கம் இருக்குமென்றால் அவர் ஹதீக்கத்துல் மஹ்திக்கு வெளியே சென்று புகை பிடிக்க வேண்டும்.

இவ்வாறு நான் புகை பிடிப்பதற்கு அனுமதி அளிக்கின்றேன். அதைத் தீயதாக கருதவில்லை என்று எவரும் எண்ணி விட வேண்டாம். எவ்வாறிருப்பினும் இது ஒரு தீமையாகும். இதிலிருந்து விலகி இருப்பதற்கும் தப்பிப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இது தொடர்பாக நான் குத்பாவும் கொடுத்திருக்கின்றேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனை ஹராம் என்று கூறவில்லை தான். எனினும் இதனை அன்னார் விரும்பவில்லை. மாறாக, சில சந்தர்ப்பங்களின் அன்னார் இதனை வெறுத்தார்கள். மேலும் இதிலிருந்து விலகி இருப்பதற்குக் கவனமூட்டினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 235)

மேலும் இளைஞர்கள் போதை தரக்கூடிய வேறு சில பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். எவ்வாறிருப்பினும் இது தவறாகும். தடுக்கப்பட்டதாகும். குற்றமாகும்.

பிறகு பாதுகாப்பு விஷயங்கள் தொடர்பாகவும் விழிப்புடன் இருங்கள். மாநாட்டுத் திடலுக்கு உள்ளேயும், வெளியேயும் தீங்கு விளைவிப்பவர்கள் தீங்கு விளைவிக்க முயற்சி செய்யலாம். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். சந்தேகத்திற்கிடமான பொருள் எதனையும் கண்டால் அல்லது சந்தேகத்திற்குரிய செயலை எவராவது செய்வதைக் கண்டால் உடனே அருகில் டியூட்டி கொடுக்கின்ற சம்பந்தப்பட்டவர்களிடம் தகவல் கொடுங்கள்.

பெண்களும் இவ்விஷயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்தவொரு பெண்மணியும் முகத்தை மறைத்துக் கொண்டு மாநாட்டுத் திடலுக்குள் வரக் கூடாது. கேட்டில் ஸ்கேனிங் சரியான முறையில் செய்யப்பட வேண்டும். அவர்களது முகத்தை பாருங்கள். மாநாட்டுத் திடலுக்கு உள்ளேயும் எவரது முகமும் மறைக்கப்பட்டிருக்கக் கூடாது.

ஸ்கேனிங் செய்வதன் காரணமாக நேரம் ஆகின்றதென்றால், விருந்தினர்களுக்குச் சிறிது நேரம் காத்திருக்க வேண்டியது வருகின்றதென்றால், அதனால் கஷ்டம் இருக்கின்றதென்றால் அதனைப் பொறுத்துக் கொள்ளவும். தற்காப்பும், செக்கியூரிட்டியும் மிக மிக அவசியமாகும்.

பெண்கள் தரப்பிலிருந்து இந்த புகார் வருகின்றது. அதாவது குழந்தைகளுக்கான மார்கியில் குழந்தைகள் அமைதியாக விளையாடுகின்றனர். அவ்வாறு குழந்தை அழுதாலும் குழந்தையின் தாய் ஏதாவதொரு பொருளைக் கொடுத்து குழந்தையின் அழுகையை நிறுத்தி விட்டு குழந்தைகளின் பெற்றோர்கள் இப்போது நாம் கூச்சலிடலாம் என்று நினைக்கின்றனர். ஒருவர் மற்றவரோடு பேசத் துவங்கி விடுகின்றனர். சில சமயங்களில் சொற்பொழிவு நடந்து கொண்டிருக்கும் போதே பேசிக் கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாக கூச்சல் நிறைந்த ஒரு சூழல் நிலவுகிறது. அமைதியாகக் கேட்க விரும்புகின்ற தாய்மார்களையும் அவர்கள் கேட்க விடுவதில்லை. இதன் பக்கம் பெண்களும், டியூட்டி கொடுப்பவர்களும் கவனம் செலுத்த வேண்டும். குழந்தைகளின் மார்கியில் குழந்தைகளின் கூச்சலைக் கூட நாம் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் தாய்மார்களின் கூச்சலைப் பொறுத்துக் கொள்ள முடியாது.

பெண்கள் தரப்பிலிருந்து இந்தக் குற்றச் சாட்டும் வந்துள்ளது. அதாவது மாநாட்டுத் திடலிலும் பெண்கள் வீணாக பேசிக் கொண்டு இருக்கின்றனர். அமைதியாக இருக்குமாறு கூறும் சிறுமிகளிடம் மிகவும் தவறாக நடந்து கொள்கின்றனர். தவறான பதிலை கொடுக்கின்றனர். இது எவ்வகையிலும் சரியான முறை அல்ல.

அல்லாஹ் அனைவருக்கும் ஆண்டு மாநாட்டிலிருந்து முழுமையான முறையில் பயன் பெறுவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. வழிகாட்டல் கையேட்டில் கூறப்பட்டுள்ள அல்லது நான் தற்போது வழங்கிய எல்லா விஷயங்கள், வழிகாட்டலின்படி அல்லது நிகழ்ச்சியில் கூறப்பட்டுள்ளபடி செயல்படும் நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக.

ஆனால் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள். அந்த விஷயமானது இந்த எல்லா விஷயங்களை விடவும் மேலானதாகும். இவை எல்லாவற்றையும் அது சூழ்ந்துள்ளது. அது துஆவாகும். ஆண்டு மாநாட்டின் வெற்றிக்காக அனைவரும் துஆ செய்யுங்கள்.

அல்லாஹ் தனது அருளாலேயே ஆண்டு மாநாட்டை எல்லா வகையிலும் வெற்றிக்குரியதாக ஆக்குவானாக. எல்லா விதமான தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. நாம் எதற்காக இங்கு ஒன்று கூடியுள்ளோமோ அந்த அருளை பெறக்கூடியவர்களாக நாம் ஆவோமாக.

அத்தோடு இதனையும் நான் கூற விரும்புகின்றேன். Review of religions கடந்த ஆண்டைப் போன்ற இவ்வருடமும் Turin Shroud தொடர்பாகத் தமது மார்கியில் கண்காட்சிக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது. அவ்வாறே அல் கலம் Project ம் அதற்கு அடுத்துள்ள மார்கியில் போடப்பட்டுள்ளது. அவ்வாறே Aarkay (பொறியார்கள்) துறை சார்பாகவும் கண்காட்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுவும் பார்க்கப்பட வேண்டியவையாகும். நிறைய விபரங்களை தரக்கூடியதாக இருக்கின்றது.

அவ்வாறே இந்த வருடம் U.K வின் தப்லீக் துறை திருக்குர்ஆனின் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. அதுவும் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். அதையும் பாருங்கள்.

அவ்வாறே இன்று true-islam மற்றும் rationalreligion என்ற இரண்டு புதிய Websites தொடங்கப்படும். தப்லீக் துறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக online ல் சொற்பொழிவு போட்டிகளுக்கான ஏற்பாடும் செய்துள்ளது. அதிலும் மக்களும் கலந்து கொள்கின்றனர். இன்று ஆண்டு மாநாட்டிலிருந்து இதை அவர்கள் ஆரம்பித்திருப்பதால் இதுவும் ஒரு சிறப்பம்சமாகும்.

எவ்வாறிருப்பினும் மாநாட்டில் நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவிர இது கூடுதலான நிகழ்ச்சியாகும். நிகழ்ச்சிகளிலிருந்தும், கண்காட்சிகளிலிருந்தும் மக்கள் பயன் பெற வேண்டும்.

அல்லாஹ் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக.

# சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்

(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

**கூடுதல் சொத்து செயலர் – நூறு பள்ளிவாசல்கள் பற்றி திட்டம்:**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜெர்மனியில் பள்ளிவாசல் கட்டப்படுவது தொடர்பான பட்ஜெட்டைப் பற்றி விரிவாக ஆய்வு செய்தார்கள். அதற்குப் பிறகு, ஜெர்மனியில் நூறு பள்ளிவாசல்களை கட்டுவது பற்றி ஜெர்மன் ஜமாஅத்தின் அமீருக்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

“நீங்கள் இந்தப் பணியை முழுமையாக செய்து முடிப்பதற்காகக் கிளை அமைப்புகளிடமிருந்து கடன் பெற்றிருக்கின்றீர்கள். எனவே ஒரு பெரும் தொகை அவர்களுக்கு நீங்கள் திரும்பச் செலுத்த வேண்டியிருக்கின்றது. இதன் பொருள் என்னவென்றால், இந்நிலையில் தற்சமயம் நீங்கள் மேலும் பள்ளிவாயில்களைக் கட்டுவதை நிறுத்தி வைக்க வேண்டும். இப்போது கட்டப்பட்டு வருகின்ற பள்ளிவாசல்களை முதலில் முழுமைப்படுத்த வேண்டும்”

பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது சுற்றுப் பயணத்தின் போது எந்த பள்ளிவாயில்களுக்கு அடிக்கல் நாட்டினார்களோ, அந்த பள்ளிவாயில்களுக்கான பட்ஜெட் தொடர்பான விரிவான ஆய்வை நடத்தினார்கள்.

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

“உங்கள் பொருளாதார நிலைமை பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு பணியும் கடன் வாங்கியே செய்து கொண்டிருக்கின்றீர்கள். இந்த கடனை திருப்பிச் செலுத்த வேண்டியதும் இருக்கின்றது. இப்போது நீங்கள் ஒரு பெரும் தொகையை தலைமையகத்திற்குச் செலுத்த வேண்டியிருக்கின்றது.

உலகம் முழுவதும் தலைமையகத்தின் பல புராஜக்ட்களும் நடைபெற்று வருகின்றன. நீங்கள் இந்த அளவுக்கு ஏன் அகலக் கால் வைக்கிறீர்கள்? உங்களால் இதற்காகச் செலவு செய்ய முடியவில்லை என்றால் எந்த அளவு உங்களால் செலவு செய்ய முடியுமோ அந்த அளவுக்கே நீங்கள் பணிகளைச் செய்ய வேண்டும்.

பள்ளிவாசல் கட்டுவதற்காக எந்த ஜமாஅத்துகள் முதலில் அதிகமாகத் தியாகம் செய்திருக்கின்றனவோ, அதாவது சில ஜமாஅத்துகள் ஒரு மில்லியன் கொடுத்திருக்கின்றன. சில ஜமாஅத்துகள் 5 அல்லது 6 மில்லியன் கொடுத்திருக்கின்றன. எனவே அவர்கள் அதிகமாகத் தியாகம் செய்திருப்பதற்கு ஏற்ப அந்த ஜமாஅத்துகளின் பள்ளிவாசல் கட்டுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.”

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

“எனவே எந்தெந்த ஜமாஅத்துகளுக்கு பள்ளிவாசல் கட்டுவதற்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது தொடர்பான ஒரு பட்டியலை நீங்கள் தயார் செய்ய வேண்டும். அதாவது எந்தெந்த ஜமாஅத்துகள் எவ்வளவு பணம் இதற்காக செலவு செய்துள்ளன?

ஒரு குறிப்பிட்ட சில காரணங்களுக்காக ஓர் இடத்தில் பள்ளிவாசல் கட்டப்படுகின்றது என்றால், அந்த காரணங்கள் என்ன என்பது பற்றி நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு நாம் ஏன் முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது பற்றியும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.”

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

“இப்போது எங்கெல்லாம் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பது பற்றிய ஒரு முழுமையான பட்டியலை நீங்கள் தயார் செய்ய வேண்டும். எங்கெல்லாம் அடிக்கல் நடப்பட்டு இருக்கின்றன? உங்களிடம் இப்போது உள்ள பண இருப்பின் நிலை என்ன? உங்களுடைய கடனின் நிலைபாடு என்ன? ஒரு வருடத்தில் உங்களால் எவ்வளவு தொகையைத் திரட்ட முடியும்?

பிறகு அந்த தொகையைக் கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? என்பதைப் பற்றிய வரைபடம் உங்கள் முன்னால் இருக்க வேண்டும். இந்த எல்லா விஷயங்களுமே தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இந்த எல்லா விஷயங்களுமே தலைமையகத்திற்கு நீங்களே கொண்டு வரவும் வேண்டும்.

எனவே வருங்காலத்தில் சில காலம் வரை இந்த எல்லாப் பணிகளையும் நான் எனது கைகளில் எடுத்துக் கொள்ள இருக்கின்றேன். அதாவது சில பள்ளிவாசல்களைக் கட்டுவதற்கான அனுமதியை வழங்குவது, பள்ளிவாசல் பற்றிய வரைபடம், பள்ளிவாசல்களுக்காக நீங்கள் ஒன்று திரட்டிய தொகை, பள்ளிவாசல்களுக்காக நீங்கள் ஒன்று திரட்ட இருக்கின்ற தொகை ஆகிய அனைத்து விஷயங்கள் தொடர்பாகவும் இலண்டனுக்கு நேரடியாக நீங்கள் வந்து என்னிடம் இதற்கான ஒப்புதலைப் பெற வேண்டும். எனவே இனிமேல் உள்ளூர் ஜமாஅத்துகளுக்கு இதற்கான எந்தவொரு உரிமையும் வழங்கப்பட மாட்டாது.”

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடைய ஒரு கேள்விக்கு ஜெர்மனி அமீர் சாஹிப் அவர்கள் பதில் கூறும் போது, அந்த இரு இடங்களில் ஜமாஅத் இல்லாததற்குச் சமமாகும் என்று கூறினார்கள். அதாவது எந்த இடங்களில் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றனவோ அங்கு ஜமாஅத் இல்லாததற்குச் சமமாக அங்குள்ள நிலைமைகள் இருக்கின்றன எனக் கூறினார்கள்.

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

“அங்கு ஜமாஅத்தே இல்லையென்றால் பிறகு ஏன் அங்கு பள்ளிவாசல் கட்ட வேண்டும்? அங்கு பள்ளிவாசலைக் கட்டுங்கள் என்று நான் ஒருபோதும் உங்களிடம் கூறவில்லை. நீங்கள் அதற்கான அனுமதியையும் என்னிடமிருந்து பெறவில்லை.”

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

“இனிமேல் எந்தவோர் இடத்தில் பள்ளிவாசல் கட்டப்படுவதாக இருந்தாலும், அங்கு ஜமாஅத் இல்லையென்றால் பள்ளிவாசல் கட்டப்படக் கூடாது. எங்கு நமது ஜமாஅத் இருக்கின்றதோ அந்த பகுதிகளுக்கே பள்ளிவாசல் கட்டுவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எங்கு ஜமாஅத் இல்லையோ அங்கு பள்ளிவாசல் கட்டுவதற்கான நோக்கம் என்னவென்று எனக்குப் புரியவில்லை.

உதாரணமாக, லாஹூரிகள் பெர்லினில் ஒரு பள்ளிவாசலைக் கட்டியிருக்கின்றனர். அது ஓர் அடையாளமாக மட்டுமே இருக்கின்றது. இவ்வாறு நீங்களும் ஓர் அடையாளம் என்ற அளவில் மட்டும் பள்ளிவாசலைக் கட்ட விரும்புகின்றீர்களா?

எனவே எங்கு நம்முடைய ஜமாஅத்தின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றதோ அந்த பகுதிகளுக்குத் தான் பள்ளிவாசல் கட்டுவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எனவே கிழக்கு ஜெர்மனியில்

பள்ளிவாசல் கட்டுவதற்கான திட்டத்தை தற்சமயம் நீங்கள் நிறுத்தி வைத்து விடுங்கள். வருங்காலத்தில் பள்ளிவாசல் கட்டுவதற்கான நிதிநிலை எவ்வாறிருந்தாலும் எந்தவொரு திட்டம் இருந்தாலும் அதை என்னிடம் கொண்டு வாருங்கள். நானே அது தொடர்பாக தீர்மானம் செய்வேன். அதாவது என்ன செய்ய வேண்டும். என்ன செய்யக் கூடாது என்பது பற்றி நானே முடிவு செய்வேன்.''

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

''தேசிய மஜ்லிஸே ஆமிலா, உள்ளூர் மஜ்லிஸே ஆமிலா, உள்ளூர் நிர்வாகம் ஆகியோரிடத்தில் இனிமேல் பள்ளிவாசல் கட்டுவதற்கான எந்தவோர் உரிமையும் இல்லை. எல்லாக் கோரிக்கைகளும் இனி என்னிடமே வர வேண்டும். எனக்கு அது பற்றிய முழுமையான விவரம் தெரிவிக்கப்பட வேண்டும். நானே அது தொடர்பாக என்ன செய்ய வேண்டும் என்று முடிவு எடுப்பேன்.''

இதற்குப் பிறகு கூடுதல் சொத்து செயலர் அவர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் கூறினார்கள்:

பள்ளிவாசல் கட்டுவதற்காக மக்களிடமிருந்து நிதியை ஒன்று திரட்டுகின்ற போது எங்களுக்கு இந்த பிரச்சனை வருகின்றது. அதாவது எந்த இடத்தில் பள்ளிவாசல் கட்டுவதற்காகத் திட்டம் இருக்கின்றதோ அங்கு பள்ளிவாசல் கட்ட ஆரம்பித்த உடனேயே மக்களுக்கு அது பற்றித் தெரிந்து விடுகின்றது. எந்நிலையிலும் பள்ளிவாசல் கட்டி முடிக்கத்தான் போகின்றார்கள். எனவே நாம் செய்த வாக்குறுதியை மெதுவாக செலுத்தினாலும் போதும் என்ற சோம்பேறித்தனம் அவர்களிடம் வந்து விடுகின்றது.

**அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

''இப்படிப்பட்ட பிரச்சனைகள் ஏற்படத்தான் செய்யும். எனவே எதுவரை மக்கள் தாங்கள் செய்திருந்த வாக்குறுதிகளில் குறைந்தபட்சம் 90 சதவிகிதத்தைக் கொடுத்து முடிக்கவில்லையோ, அதுவரை அந்த பணியை ஆரம்பிக்கவே கூடாது. ஒவ்வொருவரும் செய்த வாக்குறுதியை 90 சதவிகிதம் கொடுத்து முடித்த பிறகே இந்த பணியை ஆரம்பிக்க வேண்டும்.''

இதற்குப் பிறகு செயற்குழுவுடைய இன்னோர் உறுப்பினர் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம், கிளை அமைப்புகளுக்கு என்ன இலக்குகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றை நிறைவேற்றுவதில் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் லஜ்னா இமாயில்லாஹ் கடந்த வருடம் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அந்த இலக்கை நிறைவு செய்திருக்கின்றனர். ஒரு மில்லியனுக்கும் அதிகமான தொகை வந்திருக்கின்றது. ஆனால் அன்ஸாருல்லாஹ்விடம் குறை இருக்கின்றது என்று கூறினார்.

**அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

''இது கிளை அமைப்புகளுடைய பெருந்தன்மை ஆகும். அவர்கள் உங்களுக்குத் தேவைப்படுகின்ற தொகையை வழங்குகின்றார்கள். ஆனால் பள்ளிவாசல் கட்டுவதற்கான பொறுப்பு அவர்களிடம் இல்லை. பள்ளிவாசல் கட்டி முடிப்பதற்கான பொறுப்பு ஜமாஅத்திடமே இருக்கின்றது.

எனவே நான் கிளை அமைப்புகளுக்கு இந்த பள்ளிவாசல் கட்டுவதற்கான இலக்கை நிர்ணயம் செய்யும் போதே நீங்கள் இவர்களுக்கு உதவி செய்யுங்கள் என்று கூறியிருந்தேன். அதே சமயத்தில் பள்ளிவாசல் கட்டுவதற்கான நிதியை ஒன்று திரட்டுவது அவர்கள் மீது கடமையல்ல. இந்த பணியைச் செய்ய வேண்டியது நீங்கள்தான். சுயமாக நீங்கள் தான் தொகையை ஒன்று திரட்ட வேண்டும். குத்தாமுல் அஹ்மதிய்யாவிடமும் அன்ஸாருல்லாஹ்விடமும் லஜ்னாக்களிடமும் இதற்காக நீங்கள் எந்த தொகையையும் கொடுக்கக் கூடாது என்று நான் கூறிவிட்டால் பிறகு என்ன நிலை உருவாகும்?

எனவே இந்த தொகையை ஒன்று திரட்டுவது உங்களது பணியாகும். இந்த சுமையை நீங்கள் மற்றவர்கள் மீது சுமத்தக் கூடாது. கிளை அமைப்புகள் உங்களுக்கு உதவி செய்கின்றன என்றால் முழு சுமையையும் அந்த கிளை அமைப்புகள் மீதே சுமத்தி விட வேண்டும் என்பது சரியல்ல. உங்களது பணியை மற்றவர்கள் மீது சுமத்துகின்ற பழக்கத்தைத் தவிர்த்து விடுங்கள். கிளை அமைப்புகள் எவ்வளவு தொகையை வழங்குகின்றார்களோ அது அவர்களுடைய பெருந்தன்மையையும் தயாள குணத்தையும் காட்டுகின்றது. அதை நன்றியுடன் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் நீங்கள் கேட்பதைக் கண்டிப்பாக வழங்க வேண்டும் என்பது அவர்களுக்குக் கடமையல்ல. எங்கெல்லாம் பள்ளிவாசல் கட்டப்படுகின்றதோ அங்கு அதற்கான தொகையை ஒன்று திரட்டுவது உங்களுடைய கடமையாகும்.''

இதற்குப் பிறகு வெளியுறவு செயலருடன் (உமூரே காரிஜா) ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடைய சந்திப்பு நிகழ்ந்தது. அவர் தனது துறை சம்பந்தப்பட்ட அறிக்கையை ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு எடுத்துக் கூறினார். ஹுஸூர் அவர்கள் தனது சுற்றுப் பயணத்தின் போது பள்ளிவாசல் தொடக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது தொடர்பாக என்னென்ன பணிகள் நடைபெற்றிருக்கின்றன? என்பதைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

அதைத் தவிர எங்களிடம் இரண்டு திட்டங்கள் உள்ளன. ஒன்று, ஊடகங்களோடு தொடர்பு கொள்வது; மற்றொன்று செய்தியாளர்கள் மாநாட்டை நடத்துவது ஆகிய இந்த இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. இப்போது ஜெர்மனியில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் தப்லீக் துறையுடன் இணைந்து பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடைபெற்று வருகின்றது. இது வரை 65 சந்திப்புகள் நடைபெற்றிருக்கின்றன என்று அவர் தகவல் தெரிவித்தார்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

''மிகவும் நல்ல விஷயமாகும். இந்த அளவு சந்திப்புகள் நடைபெற்றிருக்கின்றன என்றால் நல்ல விஷயமாகும். ஆனால் இதற்குப் பிறகு அந்த நிகழ்ச்சிக்கு வந்தவர்களைத் தொடர்ந்து தொடர்பு கொள்கின்ற நிலை இருக்க வேண்டும். எவர்களிடம் ஏற்கனவே தொடர்புகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவற்றை நிலைபெறச் செய்ய வேண்டும். ஒன்றிரண்டு இடங்களில் மிக நல்ல தொடர்புகள் இருக்கின்றன. ஆனால் அவற்றில் மேலும் விரிவான நிலைமை ஏற்படுத்த வேண்டும்.''

**தஃலீமுல் குர்ஆன் செயலர்:**

இதற்குப் பிறகு தஃலீமுல் குர்ஆன் செயலர் அவர்கள் ஹுஸூர் அவர்கள் கேட்டதற்கு இணங்க இவ்வாறு பதில் கூறினார். அதாவது நாங்கள் வகுப்புகளை ஆரம்பித்து விட்டோம். கடந்த ஏழு மாதங்களாக சுற்றுப் பயணங்களும் நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்தார்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கேட்டதற்கிணங்க தஃலீமுல் குர்ஆன் செயலர் அவர்கள் கூறினார்கள்:

இப்போது 40 ஜமாஅத்துகளிலும் 10 உள்ளூர் அமாரத்துகளிலும் முறையாகத் திருக்குர்ஆன் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்கின்ற தஃலீமுல் குர்ஆன் செயலரிடம் இவ்வாறு கூறினார்கள்:**

''வக்ஃபே ஆர்ஸி அதாவது தற்காலிக வக்ஃப் தொடர்பாக என்ன பணிகள் நடைபெற்றிருக்கின்றன? என்று கேட்டதற்கு தஃலீமுல் குர்ஆன் செயலர், இது தொடர்பாக எந்த பணியும் நடைபெறவில்லை என்று கூறினார்கள்.''

**அப்போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

''இந்த விஷயம் தொடர்பாகவும் நீங்கள் உங்கள் பணியைச் செய்ய வேண்டும். அனைத்து செயற்குழு உறுப்பினர்கள், குத்தாமுல் அஹ்மதிய்யா, அன்ஸாருல்லாஹ் அனைவரும் முதலில் இந்த திட்டத்தில்

அதாவது தற்காலிகமாக வக்ஃப் செய்து பிற ஜமாஅத்துகளுக்குச் சென்று திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுக்கின்ற இந்த திட்டத்தில் பங்கு பெற வேண்டும். எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஜமாஅத்தின் செயற்குழு உறுப்பினர்கள்தான் சுயமாக தங்களை வக்ஃப் செய்து தற்காலிக வக்ஃபின் கீழ் பிற ஜமாஅத்துகளுக்குச் சென்று திருக்குர்ஆன் வகுப்புகளை நடத்த வேண்டும்.

எனவே உங்களுடைய தேசிய செயற்குழு உறுப்பினர்களிடம் முதலில் அவர்கள் வக்ஃபே ஆர்ஸி செய்ய வேண்டும் என்பதை எடுத்துக் கூறுங்கள். பொறுப்பாளர்கள் வெறுமனே இங்கு அமர்ந்திருப்பதற்காக மட்டும் பொறுப்பாளர்களாக இல்லை. எனவே முதலில் உங்களுடைய வீடுகளிலிருந்து இந்த வேலையை ஆரம்பியுங்கள். அவ்வாறு நீங்கள் செய்தால் பிறகு மக்களிடத்தில் இதற்கான தூண்டுதல் உருவாகும்.''

கடந்த இரண்டு வருடங்களில் எத்தனை ஜமாஅத் தலைவர்கள் வக்ஃபே ஆர்ஸி திட்டத்தில் பங்கு பெற்றிருக்கின்றார்கள்? மேலும் செயற்குழு உறுப்பினர்கள் எத்தனை பேர் இதில் பங்கு பெற்றிருக்கின்றார்கள்? என்று ஹுஸூர் அவர்கள் கேட்டறிந்தார்கள்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

''நீங்களே இந்த திட்டத்தில் பங்கு பெறாமல் இருந்தால் பிறகு ஏனைய மக்கள் எவ்வாறு இதில் கலந்து கொள்வார்கள்? எனவே செயற்குழு உறுப்பினர்கள் இதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.''

**வெளியீட்டுத் துறை செயலர்:**

இதற்குப் பிறகு வெளியீட்டுத் துறை செயலர் தனது அறிக்கையை ஹுஸூர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறினார்கள். நடப்பு ஆண்டில் 15 நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. அதில் திருக்குர்ஆனின் ஜெர்மன் மொழியாக்கம், தொழுகை விளக்கம் ஜெர்மன் மொழியாக்கத்துடன், வக்ஃபே நவ் பாடத் திட்டம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூலான கிஷ்தி நூஹ் மற்றும் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் போன்ற நூல்களும், இன்னும் வேறு சில நூல்களும் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன என்று ஹுஸூர் அவர்களுக்கு வெளியீட்டுத் துறை செயலர் தகவல் தெரிவித்தார்.

**முஹாஸிப் துறை:**

இதற்குப் பிறகு முஹாஸிப் அவர்கள் தனது துறை அறிக்கையை ஹுஸூர் அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். நாங்கள் மாதந்தோறும் எவ்வளவு வருமானம் நமக்கு இருக்கின்றது. செலவுகள் என்னென்ன இருக்கின்றன என்பது பற்றிய அறிக்கையை தயார் செய்கின்றோம் என்று கூறினார்கள்.

**அப்போது ஹுஸூர் அவர்கள் கேட்டதற்கிணங்க முஹாஸிப் செயலர் இவ்வாறு கூறினார்கள்:**

''பல்வேறு ஜமாஅத்துகளிலிருந்து பல்வேறு துறைகளிலிருந்து வவுச்சர்கள் எங்களுக்கு வருகின்றன. அதில் சம்பந்தப்பட்ட துறையுடைய செயலரின் கையெழுத்து இருக்கின்றது. அந்த வவுச்சர்களை நாங்கள் ஆய்வு செய்த பிறகு அவற்றைப் பொருளாதாரத் துறைக்கு அனுப்பி வைக்கின்றோம். அதில் செக்ரட்டரி மால் அவர்கள் கையெழுத்திடுகின்றார்கள்.''

பிறகு அந்த வவுச்சர்கள் அமீர் சாஹிப் அல்லது முபல்லிக் இன்சார்ஜ் அவர்களின் கையெழுத்து பெறப்படுவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. அவர்களிடமிருந்து கையெழுத்து பெற்ற பிறகே அந்த வவுச்சர்களுக்குரிய தொகையை நாங்கள் அனுப்புகின்றோம். அல்லது கணக்கு பார்ப்பதற்காக அவற்றை எடுத்துக் கொள்கின்றோம் என்று முஹாஸிப் துறை செயலர் அவர்கள் கூறினார்கள்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

இதில் அமீர் சாஹிப் சுயமாகவே கையெழுத்திட வேண்டும். எல்லா வவுச்சர்களையும் உண்மைப்படுத்துகின்ற அமீர் சாஹிப் அவர்களுடைய கையெழுத்து அதில் இருக்க வேண்டும். அது தவிர துணை அமீரின் கையெழுத்துடன் மட்டும் அவை அனுப்பப்படக் கூடாது.

*(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)*

## ஹஸ்ரத் உமர் (ரலி)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்றிலிருந்து....

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எத்தகைய நபராக இருந்தார்கள் என்றால் அவர்கள் இரவு பகலாக மிகவும் ஈடுபாட்டுடன் இஸ்லாத்தின் சட்டங்களைப் பரப்புவதிலும் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கான கடமையை நிறைவேற்றுவதிலும் முழுமையாக ஈடுபட்டு வந்தார்கள். ஆனால் உமர் (ரலி) அவர்களது நிலை எவ்வாறு இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது இந்த சம்பவம் எவ்வளவு வேதனை மிக்கதாக உள்ளது.

அதாவது அவரை அநீதி இழைப்பவர் என்று கருதி அறியாமையின் காரணமாக ஒரு நபர் அவர்களை கத்தியால் குத்தியதன் காரணமாக அவர்களது மரண வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. தனது மரணத்தைப் பற்றிய உறுதி அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் தமது படுக்கையில் மிகவும் வேதனையுடன் துடித்துக் கொண்டிருந்தார்கள். மீண்டும் மீண்டும் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்.

**இறைவா! நீ என்னை இந்த அரசாங்கத்தின் மீது ஆட்சியாளராக நியமித்தாய். ஓர் அமானிதத்தை என்னிடம் ஒப்படைத்திருந்தாய். இந்த அரசாங்கத்திற்குரிய உரிமையை நான் செலுத்தினேனா? இல்லையா? என்று எனக்குத் தெரியாது. இப்போது எனது மரணத்திற்கான நேரம் நெருங்கி விட்டது. நான் உலகை விட்டு விட்டு உன்னிடம் வர இருக்கின்றேன்.**

**என் இறைவா! நான் உன்னிடம் எனது செயல்களுக்குப் பகரமாக எந்தவொரு நற்கூலியும் வேண்டவில்லை. எந்தவொரு வெகுமதியையும் விரும்பவில்லை.**

**மாறாக, என் இறைவா! நான் இந்த விஷயத்தை மட்டுமே வேண்டுகின்றேன். நீ என் மீது கருணை காட்டி என்னை மன்னித்து விடுவாயாக. மேலும் இந்த பொறுப்பை நிறைவேற்றுவதில் என்னிடம் ஏதாவது தவறு ஏற்பட்டிருந்தால் அதைக் கண்டும் காணாமல் விட்டு விடுவாயாக.**

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் கம்பீரமுள்ள கண்ணியத்திற்குரிய மனிதராகத் திகழ்ந்தார்கள். நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவதில் உலகில் அவர்களுக்கு இணையான மனிதர்கள் மிகக் குறைவாகத் தான் இருப்பார்கள்.

(இஸ்லாம் கா இக்திஸாதி நிஸாம், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 12)

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமே உலகில் ஏகத்துவம் நிலைநாட்டப்பட்டது

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்றிலிருந்து....

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் மூலமாகத்தான் உலகில் ஏகத்துவம் நிலைபெற்றது. அதற்கு முன்பாகச் சிலர் ஹஸ்ரத் உஸைர் அவர்களையும் சிலர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களையும் கடவுளின் மகனாகக் கொண்டிருந்தனர்.

சிலர் மலக்குகளை வணக்கத்திற்குரியவர்களாகக் கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் அனைத்து விதமான குழப்பத்தையும் களைந்தார்கள். மேலும் அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களையே ஏகத்துவத்தை நிலைபெறச் செய்ய நியமித்தான். அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவே உலகில் ஏகத்துவம் நிலைபெற்றது.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 563–565 – ஜுமுஆ பேருரை 28.08.1936)

## ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகம் அதிகமாக இந்த துஆக்களை செய்து வாருங்கள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இங்கிலாந்தில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் முதல் நாளில் அதாவது 3 ஆகஸ்ட் 2018 அன்று நிகழ்த்திய மாநாட்டின் துவக்க உரையில் ஜமாஅத் உறுப்பினர்களை அதிகம் அதிகமாக துரூது ஷரீஃப் துஆவையும், கீழ்க்கண்ட துஆக்களையும் ஓதி வரும்படி வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

(1) اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى آلِ إِبْرَاهِيمَ وَعَلٰى آلِ اِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَّجِيدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى إِبْرَاهِيمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَّجِيدٌ۔

பொருள்: இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டியது போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டுவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் அளவற்ற அருட்களைக் கொடுத்தது போன்று முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்திற்கும் அருள் புரிவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

(2) رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

பொருள்: எங்களை இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர் எங்கள் உள்ளங்களைக் கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَاِسْرَافَنَا فِيْٓ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! எங்கள் குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (3:148)

(4) رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا ۫ وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்குக் கருணை காட்டாவிடில் நாங்கள் நஷ்டமடைந்தவர்களைச் சார்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

(5) رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக. (2:202)

(6) اَللّٰهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

பொருள்: என் இறைவா! நாங்கள் உன்னை அவர்களின் உள்ளத்தில் வைக்கின்றோம். அதாவது உன் மீதான அச்சத்தை அவர்களது உள்ளத்தில் நிறைப்பாயாக. மேலும் அவர்களது விஷமங்களிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.

(அபூதாவூது, கிதாப் ஃபஸாயிலுல் குர்ஆன்)

(7) رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

பொருள்: எங்கள் இறைவா! அனைத்தும் உனக்குத் தொண்டு செய்பவைகளாகும். என் இறைவா! என்னைப் பாதுகாப்பாயாக. மேலும் எனக்கு உதவி செய்வாயாக. மேலும் என் மீது கருணை காட்டுவாயாக.

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட இல்ஹாமிய துஆ)

## தேசிய இஜ்திமா 2018 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல்

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் கிளை அமைப்புகளின் தேசிய இஜ்திமாக்களை 12,13,14 அக்டோபர் 2018 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**கிளை அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறவிருக்கின்ற இந்த அருளுக்குரிய தேசிய இஜ்திமாவில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். இந்த இஜ்திமாக்கள் எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (பத்ர் வாரப் பதிப்பு)**

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 06 September 2018 Issue No. 36

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மறுக்கப்படும் இக்காலத்தில் இவ்வாறான போதனை மிகவும் பொருத்தமற்றதாகும். ஏனெனில் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கும் இந்த துஆவில் இதுவரை பூமியின் மீது இறைவனின் ஆட்சி உருவாகவில்லை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருகின்றது. மறு பக்கம் கிறிஸ்தவ ஆராய்ச்சியாளர்கள் தங்களது புதிய ஆராய்ச்சியால் வானம் என்று ஒரு பொருளே இல்லையென்றும், அவற்றின் இருப்பே இல்லை என்றும் முடிவு செய்து விட்டதாக உண்மையான மனதுடன் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆகவே இறைவனது ஆட்சியானது பூமியிலும் இல்லை; வானத்திலும் இல்லை என்பதே இதன் சாரம்சமாகும்.

வானங்களில் இருப்பதை கிறிஸ்தவர்கள் மறுத்து விட்டனர். மேலும் அவர்களின் புதிய ஏற்பாடும் பூமியின் ஆட்சியிலிருந்து இறைவனுக்கு விடையளித்து விட்டது. எனவே அவர்களின் கூற்றின்படி அவர்களின் இறைவனிடத்தில் பூமியின் ஆட்சியுமில்லை. வானத்தின் ஆட்சியுமில்லை. ஆனால் நமது மதிப்பிற்குரிய இறைவன் ஃபாத்திஹா அத்தியாத்தில் வானத்தின் பெயரையோ பூமியின் பெயரையோ குறிப்பிட்டுக் கூறாமல் அவன் ரப்புல் ஆலமீன் (அனைத்து உலகங்களையும் பரிபாலிப்பவன்) என தன்னைக் குறிப்பிட்டு அதன் உண்மையையும் நமக்கு விளக்கியுள்ளான்.

அதாவது எதுவரை குடியிருப்புகள் இருந்தாலும்☆ எதுவரை படைப்பினங்கள் குடியிருப்பதாக நிரூபிக்கப்பட்டாலும் மேலும் ஏதாவதொரு படைப்பினம் எங்கிருந்தாலும் அவை உடலாகவோ ஆன்மாவாகவோ இருந்தாலும் அவை எல்லாவற்றையும் படைப்பவன் பரிபாலிப்பவன் இறைவனேயாவான். அவன் எல்லா நேரமும் அவர்களை பரிபாலித்துக் கொண்டும் அவர்களின் நிலைக்கு ஏற்றவாறு அவர்களுக்கு சகல ஏற்பாடுகளையும் நிறைவேற்றிக் கொண்டும் இருக்கின்றான்.

மேலும் முழு உலகிலும் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நொடிப் பொழுதும் தொடர்ந்து இருந்தது வரக்கூடிய அவனது பண்புகளாகிய ரூபூபிய்யத், ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத், நன்மை தீமைகளுக்கு பிரதிபலன் அளித்தல் ஆகியவை அனைத்தும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

ஃபாத்திஹா அதிகாரத்தில் ‘மாலிக்கி யவ்மித்தீன்’ என்னும் சொற்றொடரில் நன்மை தீமையின் பிரதிபலன் இறுதி நாளில் மட்டும் தான் இருக்கும் என்பது கருத்தன்று என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, செயல்களுக்கு இறுதியாகவும், பெரிதாகவும் பிரதிபலன் அளிக்கும் சமயத்தின் போதே கியாமத் உண்டாகும் என்று திருக்குர்ஆனில் திரும்பத் திரும்ப மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஆயினும் செயல்களுக்கு ஒருவிதமான பிரதிபலன் இவ்வுலகிலேயே கிடைக்கத் தொடங்கி விடுகிறது. இதைப் பற்றி திருக்குர்ஆனின் இந்த வசனம் சுட்டிக் காட்டுகிறது. **(8:30)**

يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا

மேலும் இவ்விஷயத்தையும் கேட்டுக் கொள்ளுங்கள். பைபிளின் புதிய ஏற்பாட்டின் பிரார்த்தனையில் எங்களின் ஒவ்வொரு நாள் அப்பத்தையும் இன்றே தந்தருள்வாயாக என்று வேண்டப்பட்டிருக்கிறது. ஆனால் எவனுடைய ஆட்சி இதுவரை பூமியில் உண்டாகவில்லையோ அவனால் எவ்வாறு அப்பம் வழங்கி உதவ முடியும்? என்பதே வியப்புமிக்கதாக இருக்கிறது.

ஏனெனில் இந்நாள் வரை பூமியிலுள்ள எல்லாப் பயிர்களும், எல்லாக் கனிவகைகளும் அவனுடைய கட்டளை இல்லாமல் தாமாக உற்பத்தியாகின்றன. மழை தானாகப் பொழிகிறது. இவ்வாறிருக்க எவருக்காவது அப்பமளிக்க அவனுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

எப்போது அவனது ஆட்சி பூமியில் உண்டாகுமோ அப்போது தான் அவனிடம் அப்பம் கேட்க வேண்டும். இப்போது அவன் பூமியிலுள்ள ஒவ்வொரு பொருள் மீதும் தொடர்பு இல்லாதவனாய் இருக்கின்றானே! எப்போது இந்த எல்லாச் சொத்துக்களையும் அவன் முழுமையாகக் கைக்கொள்வானோ அப்போதுதான் அவனால் அப்பம் கொடுக்க முடியும். இந்தச் சமயத்தில் அவனிடம் உதவி கேட்பதும் பொருத்தமற்ற ஒன்றாகும். மேலும் இந்நிலையில் நாங்கள் எங்களது கடன்காரர்களை மன்னிப்பது போன்று நீயும் உனது கடனுக்காக எங்களை மன்னிப்பாயாக என்ற கூற்றும் சரியன்று. ஏனெனில் பூமியின் ஆட்சி இன்னும் அவனுக்கு கிடைக்காமலிருக்கையில் மேலும் கிறிஸ்தவர்கள் இதுவரை எதையும் அவனது கையால் பெற்று உண்ணாமலிருக்கையில் பின்னர் என்ன கடன்?

ஆகவே இதுபோன்ற ஒரு தரித்திரனான இறைவனிடம் கடனை மன்னிக்கக் கோருவது கொஞ்சம் கூட அவசியமில்லை. அவனுக்குச் சிறிதும் அச்சப்படத் தேவையுமில்லை. ஏனெனில் இதுவரை பூமியில் அவனது ஆட்சி இல்லை. மேலும் அவனது ஆட்சியின் சாட்டை எவ்வித அச்சத்தையும் உருவாக்கவும் முடியாது.

யாராவதொரு குற்றவாளிக்குத் தண்டனை அளிக்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு இருக்கிறதா? அல்லது மூஸா (அலை) காலத்தில் கீழ்ப்படியாத கூட்டத்தினரை பிளேக்கால் அழித்தது போல் அவனால் அழிக்க முடியுமா? அல்லது லூத் (அலை) கூட்டத்தினர் மீது கற்களைப் பொழிந்தது போல் அவனால் பொழிய முடியுமா? அல்லது நிலநடுக்கம், மின்னல் தாக்குதல் அல்லது வேறு ஏதாவது தண்டனையால் கீழ்ப்படியாதவர்களை அவனால் அழித்தொழிக்க முடியுமா? ஏனெனில் இதுவரை இறைவனது ஆட்சியானது பூமியில் உண்டாகவில்லையே!

ஆகவே தேவகுமாரன் பலவீனமானவனாய் இருந்ததைப்போல் கிறிஸ்தவர்களின் தேவனும் பலவீனமானவனாக இருக்கிறான். மேலும் அவனது குமாரன் எதிலும் செயலற்றவனாக இருந்ததைப் போன்று தேவனும் செயலற்றவனாகவே இருக்கிறான்.

இவ்வாறிருக்க இதுவரை பூமியின் மீது அவனது ஆட்சி இல்லாமலிருக்கையில் அவனிடம் பூமியில் எங்களின் கடனை மன்னிப்பாயாக என்பது போன்ற துஆ கேட்பது பயனற்றதேயாகும். கடனை மன்னிப்பதற்கு அவன் எப்போது கடன் அளித்தான்?

மேலும் பூமியில் அவனது ஆட்சியே இல்லை என்றால் பின்னர் பூமியின் மீது வளர்ந்து வரக்கூடிய பயிர்களெல்லாம் அவனது கட்டளையினால் வளரக் கூடியவை அல்ல. பூமியிலுள்ள பொருள்களெல்லாம் அவனுடையவையுமல்ல.

மாறாக அவை அனைத்தும் தாமாகவே உண்டானவையாகும். ஏனெனில் அவனது கட்டளை பூமியில் இயங்கவில்லையே! அவன் பூமியில் அதன் அதிகாரியாகவும் அரசனாகவும் இல்லாமலிருக்கும் போது பூமியிலுள்ள சுகபோகங்கள் அனைத்தும் அவனது ஆட்சி பீடத்தின் கட்டளையால் செயல்படாமலிக்கும் போது அவனுக்குத் தண்டனை அளிக்கக்கூடிய அதிகாரமோ, உரிமையோ கிடையாது.

ஆகவே, இவ்விதமாகப் பலவீனமுள்ளவனை இறைவனாக ஆக்குவதும் பூமியில் இருந்து கொண்டு ஏதாவது காரியங்களுக்கு அவனை நம்பியிருப்பதும் அறிவீனமாகும். ஏனெனில் இதுவரை அவனது ஆட்சி பூமியில் இல்லையே!

**(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 40–43)**

---

அடிக்குறிப்பு: ரப்புல் ஆலமீன் என்னும் இச்சொல் எத்தகைய ஒருங்கிணைந்த பொருட் செறிவுள்ள சொல் என்பதனைக் கவனியுங்கள். வேற்றுக் கிரகங்களில் குடியிருப்புகள் இருக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டாலும் அவை இந்தக் கூற்றின் கீழ்தான் வரும். – நூலாசிரியர்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad